**சுருக்கம்**

சிலை – சென்னை மாவட்டம் – மயிலாப்பூர் மற்றும் திருவல்லிக்கேணி வட்டம் – அண்ணா சாலை மற்றும் செனடாப் சாலை சந்திப்பில் செனடாப் சாலையின் நடுவில் உள்ள சாலை தீவில் – மறைந்த தலைவர் திரு. ஜி.கே. மூப்பனார் அவர்களின் முழுவுருவ வெண்கல சிலையை நிறுவுதல் – அனுமதி அளித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை**

அரசாணை (நிலை) எண்.229 நாள்: 26.11.2009

கார்த்திகை – 10,
திருவள்ளுவர் ஆண்டு – 2040,

படிக்கவும்:

1. அரசாணை (நிலை) எண்.221, நகராட்சி, நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 20.11.1998

மீண்டும் படிக்கவும்:

2. திரு. சைதை ப்பி. ரவி (என்கிற) ப்பி. ரங்கராமானுஜம், சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர் (116 வது வட்டம்) மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களின் கடித நாள் 16.06.2006, 20.04.2009 மற்றும் 12.10.2009.
3. சென்னை மாநகராட்சி ஆணையர் கடிதம் நி.ம.உ.து.ந.க. எண்.எல்இ1/3986/2009, நாள் 13.03.2009, 05.10.2009 மற்றும் 20.10.2009
4. சென்னை மாநகர காவல் ஆணையர் கடித எண்.Tr. Imp. (2)/811/8105/2009, நாள் 19.08.2009
5. சென்னை மாநகர போக்குவரத்து காவல் கூடுதல் ஆணையர் கடித எண்.Tr.Imp(2)/811/8105/2009, நாள் 19.08.2009
6. சென்னை மாவட்ட ஆட்சியர் கடித எண்.ஒ2/22009/2009, நாள் 24.09.2009

* * * * *

**ஆணை:**

மேலே பார்வை இரண்டில் படிக்கப்பட்ட சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சித் தலைவர் திரு. சைதை ப்பி. ரவி அவர்களின் கடிதங்களில் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சென்னை மாவட்டம், மயிலாப்பூர்–திருவல்லிக்கேணி வட்டம், அண்ணா சாலை மற்றும் செனடாப் சாலை சந்திப்பில் சென்டாப் சாலை நடுவில் உள்ள தீவில் மறைந்த தலைவர் ஜி.கே. மூப்பனார் அவர்களின் முழு உருவ வெண்கல சிலையை தனது செலவில் நிறுவிடவும், நிறுவப்பட்டபின் சிலையின் பராமரிப்பு பொறுப்பு முழுவதும் அவரே பொறுப்பேற்றுக் கொள்ளவதாக தெரிவித்து அதற்கான அரசின் அனுமதியை கோரியுள்ளார்.

2. சென்னை மாநகராட்சி ஆணையர், பார்வை மூன்றில் படிக்கப்பட்ட தமது கடிதத்தில், சென்னை மாநகராட்சி மன்றம் தனது தீர்மான எண்.77/2009, நாள் 23.02.2009 – ல் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சித் தலைவர் திரு. சைதை ப்பி. ரவி அவர்கள் மக்கள் தலைவர் திரு. ஜி.கே.மூப்பனார் அவர்களின் சேவையை போற்றும் வகையில் அண்ணா சாலை மற்றும் செனடாப் சாலை சந்திப்பில் செனடாப் சாலை நடுவில் உள்ள தீவில் அன்னாரது சிலையை, நிறுவ சென்னை மாநகராட்சி மன்றம் தனது இசைவை அளித்து அரசிற்கு முன்மொழிவுகளை அனுப்ப அனுமதி அளித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

3. சென்னை மாநகர காவல் ஆணையர் மற்றும் சென்னை மாநகர காவல் போக்குவரத்து கூடுதல் ஆணையர் நான்கு மற்றும் ஐந்தில் படிக்கப்பட்ட தங்களது கடிதங்களில் அன்னாரின் சிலையை நிறுவ கீழ் வரும் நிபந்தனைக்குட்பட்டு தடையில்லா சான்றினை அளித்துள்ளார்.

(1) செனடாப் சாலை மற்றும் அண்ணா சாலை சந்திப்பில் உள்ள செனடாப் சாலையின் நடுவே உள்ள சாலை தீவை மேலும் விரிவுபடுத்துதல் கூடாது.

(2) சிலையானது சாலை தீவின் உட்புறம் மட்டுமே நிறுவ வேண்டும்.

4. சென்னை மாவட்ட ஆட்சியர், பார்வை ஆறில் படிக்கப்பட்ட தனது கடிதத்தில் அன்னாரின் சிலையை நிறுவுவது குறித்த முன்மொழிவுகளை பரிந்துரை செய்துள்ளார்.

5. மேற்குறித்த சூழ்நிலையில், அரசாணை (நிலை) எண்.221, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 20.11.1998 – ல் வெளியிடப்பட்டுள்ள சிலைகள் நிறுவும் போது கடைபிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் என்ற நிபந்தனையுடன், சென்னை மாநகராட்சி மன்ற தீர்மான எண்.77/2009, நாள் 23.02.2009 – ல் அளித்த ஒப்புதலின் அடிப்படையில், சென்னை மாநகராட்சி ஆணையர், சென்னை மாவட்ட ஆட்சியர் ஆகியோரின் பரிந்துரைகளின்படியும் சென்னை மாநகர காவல் ஆணையர் மற்றும் சென்னை மாநகர போக்குவரத்து காவல் கூடுதல் ஆணையர் ஆகியோரின் நிபந்தனைகளுக்குட்பட்டு அளித்துள்ள தடையில்லா சான்றின் அடிப்படையில், சென்னை மாநகராட்சியின் மன்ற உறுப்பினரும் (வட்டம்–116), எதிர்க்கட்சித் தலைவருமான திரு. சைதை ப்பி. ரவி அவர்களின் கோரிக்கையை ஏற்று சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சென்னை மாவட்டம், மயிலாப்பூர்–திருவல்லிக்கேணி வட்டம், அண்ணா சாலை மற்றும் செனடாப் சாலை சந்திப்பில் சென்டாப் சாலை நடுவில் உள்ள தீவில் 0.0036 சதுர அடியில் மறைந்த தலைவர் ஜி.கே. மூப்பனார் அவர்களின் முழுவுருவ வெண்கலச் சிலையினை நிறுவ சென்னை மாநகராட்சியின் எதிர்க்கட்சித் தலைவரான திரு. சைதை ப்பி. ரவி அவர்களுக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி,
அரசு செயலாளர்.

பெறுநர்:
திரு. சைதை ப்பி. ரவி, என்கிற ப்பி. ரங்கராமானுஜம், எதிர்க்கட்சி தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர் (வட்டம்–116) சென்னை மாநகராட்சி, சென்னை – 3 (சென்னை மாநகராட்சி ஆணையர் மூலமாக)
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை – 3.
மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம், சென்னை – 1
ஆணையர், சென்னை மாநகர காவல், சென்னை – 8
கூடுதல் ஆணையர், சென்னை மாநகர போக்குவரத்து காவல், சென்னை – 10

மாநில கணக்காயர், சென்னை – 18/35
இயக்குநர் உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை – 108.
வட்டாட்சியர், மயிலாப்பூர்–திருவல்லிக்கேணி வட்டம், சென்னை – 28

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9
மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9
தலைமைச் செயலரின் தனி செயலர், சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு செயலாளரின் தனி செயலர், சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை – 9
இருப்பு கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

சு. சந்திரமணி
அரசு சார்புச் செயலாளர்